2023 ஜனவரி 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி. வேலுமணி, அவர்கள்.*

திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலையில் தங்கள் அறைக்கு வந்து, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்* Zero hour*–ல் இந்தப் பிரச்சினையை, சட்டம்–ஒழுங்குப் பிரச்சினைப் பற்றி பேசவிருக்கிறார் என்று* mention *செய்து, சொல்லிவிட்டுத்தான் வந்தேன். அதற்கு முறைப்படி அனுமதி கேட்டிருக்கிறோம். எங்கள் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதைப்போல, எதிர்க்கட்சித் தலைவராக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இருந்தபோது, ஒவ்வொரு நாளும் பல பிரச்சினைகளைப் பற்றி அதிகமாகப் பேசியிருக்கிறார்கள். எங்களுடைய முன்னாள் சபாநாயகர் திரு. தனபால் அவர்கள் அனுமதி கொடுத்திருக்கிறார்கள். (குறுக்கீடு)*

4. உரிமைமீறல் பிரச்சினை

9-1-2023 அன்று மாண்புமிகு ஆளுநர் உரையாற்றுகையில் முக்கிய விருந்தினர்கள் பார்வையாளர்கள் மாடத்திலிருந்த ஆளுநர் அவர்களின் விருந்தினர் பேரவை நடவடிக்கைகளைத் தனது கைபேசியில் பதிவு செய்தது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சரி. மாண்புமிகு உறுப்பினர் முனைவர்* T.R.B. *ராஜா அவர்கள். (குறுக்கீடு) கொஞ்சம் இருங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் முனைவர்* T.R.B. *ராஜா அவர்கள்.*

முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) அவை உரிமை மீறல் குறித்த ஒரு முன்னறிவிப்பினை 9–1–2023 அன்று (குறுக்கீடுகள்) நான் தங்களிடம் தந்துள்ளேன்.*

9–1–2023 அன்று மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் (குறுக்கீடுகள்) பேரவையில் உரையாற்றுகையில், பேரவைத் தலைவர் அவர்களின் இருக்கைக்கு எதிரில் (குறுக்கீடுகள்) உள்ள முக்கிய விருந்தினர்கள், பார்வையாளர்கள் மாடத்தில் (குறுக்கீடுகள்) அமர்ந்திருந்த மாண்புமிகு ஆளுநர் அவர்களின் விருந்தினர்களில் ஒருவர் பேரவையின் (குறுக்கீடுகள்)

[முனைவர் T.R.B. ராஜா] [2023 ஜனவரி 11

நடவடிக்கைகளைத் தனது கைபேசியில் ஒளிப்பதிவு செய்து கொண்டிருந்தார். (குறுக்கீடுகள்) அதனைப் பார்த்த நான் உடனடியாக அவைக் காவலர் (குறுக்கீடுகள்) சார்ஜெண்ட் அவர்களிடம் தெரிவித்து, (குறுக்கீடுகள்) நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக்கொண்டேன். (குறுக்கீடுகள்) பேரவையில் கைப்பேசியைப் பயன்படுத்தக் கூடாது என்பது தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 87 (X)–ன்கீழ் வகை செய்யப்பட்டுள்ளது. (குறுக்கீடுகள்)

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் எழுந்து நின்றனர். ஓ. பன்னீர்செல்வம் தலைமையிலான உறுப்பினர்கள் தவிர.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் பேசி முடிக்கட்டும், நான் வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்) அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் பேசுவதற்கு வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) அவர் பேசுவதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

3. தகவல் கோரல்—*தொடர்ச்சி*

(அ) சென்னை, சாலிகிராமத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பாதுகாப்புப் பணியிலிருந்த பெண் காவலருக்கு பாலியல் தொல்லை உள்ளிட்ட சட்டம்-ஒழுங்கு பிரச்சினை—*தொடர்ச்சி*

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களை நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். அவர்களைப் பேச அனுமதியுங்கள். என்ன பேசுகிறார் என்பதைக் கேட்போம். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, பேசுங்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவரைப் பேச அனுமதியுங்கள். என்ன பேசுகிறார் என்பதைக் கேட்போம். தேவையில்லையென்றால், நீங்கள் அவைக் குறிப்பிலிருந்து அதனை நீக்குங்கள். அதன் பின் அதற்குரிய விளக்கத்தை நான் சொல்லத் தயாராக இருக்கிறேன்.

இப்படிப்பட்ட சம்பவங்கள் குறித்து பேசுவதாகச் சொல்லவில்லை உட்காருங்கள்" என்று சொன்னபோது, 'தாராளமாக பேசுங்கள்' என்று சொல்லி, நம்முடைய முதல்வர் அவர்கள் பெருந்தன்மையுடன் அனுமதித்திருக்கிறார்கள். 'அவர்கள் முழுமையாகப் பேசி முடித்தபின்பு நான் பதில் சொல்கிறேன்' என்ற பிறகும், பதில் சொல்லும்வரைகூட காத்திருக்காமல் செல்வது, உண்மையிலேயே இது சபை மரபுதானா, எந்த அளவில் அவர்கள் நடந்துகொள்கின்றார்கள் என்பது எனக்குத் தெரியவில்லை; புரியவில்லை. இந்தச் சட்டமன்றத்தில் அமர்ந்து பணியாற்றுவதில் அவர்களுக்கு என்ன பிரச்சினைகள் இருக்கின்றன என்று எனக்குத் தெரியவில்லை. மக்கள் பிரச்சினையைப் பேசுவதற்கு இந்த அவையைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். அதற்கு மாறாக இப்படிப்பட்ட நிகழ்வுகளை zero hour–ல் எடுத்துப் பேசுவது கேலிக்கூத்தாகிவிடும். என்றோ நடந்த சம்பவங்களை எதற்காகவோ பேசிவிட்டு செல்வது, மரபை மீறிய செயலாகத்தான் நான் கருதுகிறேன்.

ஒரு கேள்வியைக் கேட்டுவிட்டு அதற்குப் பதிலுக்குக்கூட— மாண்புமிகு முதல்வர் அவர்கள் தைரியமாக 'நான் பதில் சொல்கிறேன்' என்று பதிலும் சொல்கின்றார்கள்.—கேட்காமல் இருப்பது உண்மையிலேயே வருத்தம் அளிக்கிறது. ஆகவே, இதுபோன்ற சம்பவங்கள் இனிமேல் நடைபெறாமல் இருப்பதற்கு எல்லோரும் ஒத்துழைக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

4. உரிமைமீறல் பிரச்சினை—*தொடர்ச்சி*

9-1-2023 அன்று மாண்புமிகு ஆளுநர் உரையாற்றுகையில் முக்கிய விருந்தினர்கள் பார்வையாளர்கள் மாடத்திலிருந்த ஆளுநர் அவர்களின் விருந்தினர் பேரவை நடவடிக்கைகளைத் தனது கைபேசியில் பதிவு செய்தது—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் T.R.B. ராஜா அவர்கள்.*

முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 9 ஆம் தேதி அன்று அவை உரிமைமீறல் குறித்த ஒரு முன்னறிவிப்பினை நான் உங்களுக்குத் தந்துள்ளேன்.*

2023 ஜனவரி 11] [*முனைவர்* T.R.B. *ராஜா*]

9–1–2023 அன்று மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் பேரவையில் உரையாற்றுகையில், பேரவைத் தலைவர் அவர்களின் இருக்கைக்கு எதிரேயுள்ள முக்கிய விருந்தினர்கள் பார்வையாளர்கள் மாடத்தில் அமர்ந்திருந்த மாண்புமிகு ஆளுநர் அவர்களின் விருந்தினர்களில் ஒருவர், பேரவை நடவடிக்கைகளைத் தனது கைபேசியில் ஒளிப்பதிவு செய்துகொண்டிருந்தார். அதனைப் பார்த்த நான், உடனடியாக அவைக் காவலர் சார்ஜெண்ட் அவர்களிடம் இதைத் தெரிவித்து, அவர்மீது நடவடிக்கை எடுக்கச் சொல்லி கேட்டுக்கொண்டிருந்தேன்.

பேரவையில் கைபேசியை யாரும் பயன்படுத்தக் கூடாது என்பது தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 87 (X)*–ல் வகை செய்யப்பட்டுள்ளது. இது எனக்கு மிக நன்றாகத் தெரியும்; உங்களுக்கும் நன்றாகவே தெரியும். ஆகவே, 9–1–2023 ஆம் நாளிட்ட என்னால் வழங்கப்பட்டுள்ள முன்னறிவிப்பினை அவை உரிமை மீறல் குழுவிற்கு அனுப்பி உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் எழுப்பிய பிரச்சினையை மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்போது அவை உரிமைமீறல் இருப்பதாகத் தெரிவதால், பேரவை விதி 226–ன்கீழ் ஆய்ந்து அறிக்கை அளிப்பதற்காக அவை உரிமைக் குழுவிற்கு அனுப்பி வைக்கிறேன்.*

5. 9–1–2023 அன்று மாண்புமிகு ஆளுநர் உரையாற்றுகையில் பேரவையில் நடைபெற்ற நிகழ்வுகள் மற்றும் பேரவை விதி 92 (vii)–க்கு உட்பட்டு உறுப்பினர்கள் உரையாற்றுதல் குறித்து பேரவைத் தலைவர் அவர்களின் தீர்ப்புரை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *9–1–2023 அன்று பேரவையில் மாண்புமிகு ஆளுநர் அவர்கள் உரையின்போது நடைபெற்ற நிகழ்வுகள் குறித்து என்னுடைய தீர்ப்புரையை வழங்க விரும்புகிறேன்.*